## 1000 கோடி ரூபாய்க்கும் மேலான மதிப்பில் பல்வேறு திட்டங்களை அடுக்கடுக்காக அறிவித்து

# கோவையில் 'சிக்ஸர்' அடித்தார், முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## 'இந்தியாவின் சக்தி வாய்ந்த மாமனிதர்!' என ஏடுகள் பாராட்டும் தமிழ்நாடு முதல்வருக்குப் புகழாரம் சூட்டி– 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளிதழ் சிறப்புக் கட்டுரை!

**சென்னை, நவ. 9 -**

**"1000 கோடி ரூபாய்க்கும் மேலான மதிப்புக் கொண்ட பல்வேறு திட்டங்களை அடுக்கடுக்காக அறிவித்து, கோவையில் 'சிக்ஸர்' அடித்துள்ளார், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்!" என, 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளிதழ் புகழாரம் சூட்டியுள்ளது.**

**அந்நாளிதழில் இதுகுறித்து எழுதப்பட்டுள்ள சிறப்புக் கட்டுரை விவரம் வருமாறு:-**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது இரண்டு நாள் கோவை மாவட்ட பயணத்தின்போது, அங்கு மக்கள் நலனுக்காக 6 புதிய திட்டங்களை அறிவித்தார்.

கோவை மாவட்டத்தின் மக்கள் வளர்ச்சிக்காக ஒரு 'சிக்சர்' அடித்ததைப் போல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

❖ ஒருங்கிணைந்த தங்க நகைகள் தயாரிப்புக்கான தொழில் பூங்கா,

❖ புதிய தகவல் தொழில் நுட்ப டைடல் பூங்கா,

❖ அவினாசி மேம்பாலத்தை 5 கி.மீ. நீளத்திற்கு சுமார் 600 கோடி ரூபாய் செலவில் நீட்டிக்கப்படும் திட்டம் (சின்னியம்பாளையத்திலிருந்து நீலாம்பூர் வரை),

❖ கோவை மாநகரத்தில் ரூ.200 கோடி செலவில் சாலைகள் சீரமைப்புத் திட்டம் உள்பட 6 புதிய திட்டங்களை அறிவித்தார்.

அந்த விழாவில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தங்க நகைகள் தொழில் பூங்கா, கோவையில் உள்ள குறிச்சி சிட்கோ மையத்தில் அமையும் என்று தெரிவித்தார்.

இது உலக உளவில் ஒரு பெரிய மையமாக அமையும். இந்த தங்க நகைகள் பூங்கா ஒன்றிய அரசின் அங்கீகாரம் மற்றும் தர நிர்ணய பரிசோதனைக் கூடம் (NABL) சான்றிதழுடன் ரூ.126 கோடி செலவில் கட்டப்படும் என்று தெரிவித்தார்.

**2000 பேருக்கு நேர்முகமாகவும் 1500 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு!**

இந்தப் பூங்கா அமைப்பதன் மூலம் சுமார் 2000 பேருக்கு நேர்முகமாகவும் 1500 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

கோவை மாநகரம் கடந்த 2, 3 ஆண்டுகளில் தகவல் தொழில் நுட்பத் துறையில் மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டு வருகின்றது. அதனால் தகவல் தொழில் நுட்பத்துறையில் நிறைய நிறுவனங்கள் தங்களது அலுவலகங்களை நிறுவுவதற்கு இடம் தேவைப்படுகிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

ஆகையால் கோவை மாநகரத்தில் மற்றுமொரு பெரிய தொழில் நுட்ப வளாகம் 17.17 ஏக்கர் நிலப் பரப்பில் எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் நிறுவப்படும். இது தற்போது உள்ள டைடல் பூங்காவின் அருகாமையில் உள்ளது என்று முதல்வர் அவர்கள் கோடிட்டுக் காட்டினார்.

சென்னையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்ட சர்வதேச அளவில் விளங்கும் 'ராமானுஜன் ஐ.டி. சிட்டி' போல கோவையில் வரவிருக்கும் இந்த பெரிய தகவல் நுட்பப் பூங்கா சர்வதேச ஐ.டி. நிறுவனங்களின் உதவியுடன் நிறுவப்படும்.

**தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒரு புதிய மைல் கல்!**

இந்த வளாகம் 3 மில்லியன் சதுர அடி பரப்பில் நிறுவப் பெற்று சுமார் 36,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கி தகவல் தொழில் நுட்பத் துறையில் ஒரு புதிய மைல் கல்லாக வருங்காலங்களில் திகழும் என்பதில் எனக்கு மிக்க நம்பிக்கையுள்ளது என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அடுத்து, அவினாசி சாலையில் கடந்த ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு தொய்வாக நடைபெற்ற உப்பிலிப்பாளையம்முதல்சின்னியம்பாளையம் வரையிலான உயர்மட்ட மேம்பால சாலைப் பணிகள் இப்போது முடுக்கி விடப்பட்டுள்ளன என்றார் முதல்வர்.

இந்த மேம்பாலம், மேலும் 5 கிலோ மீட்டர்நீளத்திற்குசின்னியம்பாளையம் முதல் நீலாம்பூர் வரை சுமார் 600 கோடி ரூபாய் செலவில் இந்த உயர் மட்ட மேம்பால சாலை நீட்டிப்புப் பணிகள் செய்யப்படும் என்றார் முதல்வர்.

மூன்றாவதாக, தொண்டாமுத்தூர் பகுதியில் யானைகள் நடமாட்டத்தால் நிகழும் மனித - விலங்கு மோதல் சம்பவங்களைத் தடுக்கவும் பயிர்ச் சேதங்கள் மற்றும் உயிரிழப்புகளைத் தவிர்க்கவும், சுமார் 7 கோடி ரூபாய் செலவில் 10 கி.மீ. நீளத்திற்கு ஒரு நவீன யானை



THE NEW INDIAN EXPRESS TAMIL NADU

04 CHENNAI THURSDAY 07.11.2024

**Stalin hits a sixer in Coimbatore**

Gold jewellery industrial park, IT complex, extension of flyover on Avinashi Road, modern elephant-proof fences, drinking water scheme and spl project to upgrade roads announced

EXPRESS NEWS SERVICE @ Coimbatore

CHIEF Minister MK Stalin has announced six new projects for the people in the district. Some of the announcements include an integrated jewellery park, a new Tidel Park, extending the Avinashi Road flyover for 5 km from Chinniyampalayam to Neelambur, and repairing the damaged roads of Coimbatore city at the cost of ₹200 crore.

Stalin said a gold jewellery industrial park will be set up at Kurichi SIDCO in Coimbatore, which is a major jewellery hub in the world.

"The park will have a National Accreditation Board for Testing and Calibration Laboratories (NABL)-accredited laboratory and will be built at a cost of ₹126 crore. It will provide employment to 2,000 people

CM Stalin at foundation stone laying ceremony of Periyar library | EXPRESS

...mpalayam to Neelambur for another 5 km at a cost of about ₹600 crore, Stalin said.

He also said modern elephant-proof fences will be constructed for 10 kilometres at a cost of ₹7 crore to prevent man-animal conflict caused by the movement of elephants and to prevent crop damage and loss of life in the Thondamuthur region.

A joint drinking water scheme will be implemented at a cost of ₹26 crore, which will benefit 38 villages in the Anaimalai panchayat union and town panchayats of Kotur, Vettaikaranpudur and Udaiyakulam. Similarly, another joint drinking water scheme to supply drinking water to 295 villages in Pollachi north, Pollachi south and Kinathukadavu panchayat unions will be implemented at a cost of ₹51 crore.

The chief minister said a special project will be implemented in the Coimbatore corporation at an estimated cost of ₹200 crore to upgrade the roads that have not been renovated for many years, pave new roads affected by the UGD works and turn mud roads in residential areas into quality tar roads.

Meanwhile, social activists, NGOs and residents have welcomed the projects announced by the chief minister and expressed their gratitude over the announcements.

"Coimbatore has emerged as one of the fastest-growing IT hubs, and this has increased the need for office space. Another large IT complex will be set up on a 17.17-acre land in ELCOSEZ" — MK Stalin

புகாத பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படும் என்று முதல்வர் அறிவித்தார்.

**38 கிராமங்களுக்கு பயனிக்கும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!**

மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசுகையில், ரூபாய் 26 கோடி மதிப்பீட்டில், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம் மற்றும் கோட்டூர், வேட்டைக்காரன்புதூர்மற்றும்உடையகுளம் பேரூராட்சிகளில் உள்ள 38 கிராமங்களுக்கு பயன் அளிக்கக் கூடிய வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம் மேம்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

கோவையில் வடக்கில் அனுப்பர் பாளையம் கிராமத்தில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கோவை மாநகராட்சியில் ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 200 கோடி ரூபாய் செலவில் சாலை மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்தார்.

பல ஆண்டுகளாக புதுப்பிக்கப்படாத உள்ள சாலைகள், பாதாள சாக்கடைப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் அதிக குடியிருப்புகள் உள்ள பகுதிகளில் மண் சாலைகள், இவைகள் எல்லாம் இந்தத் திட்டத்தின்கீழ் தரமான தார் சாலைகளாக மேம்படுத்தப்படும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

மேலும், பொள்ளாச்சி வடக்கு - பொள்ளாச்சி தெற்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் 295 கிராமங்களுக்கு குடிநீர் வழங்கக் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் 51 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

இவ்வாறு 'தி நியூ இண்டியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளது.

---

## பயிர்க்கடன் - உரங்கள் தங்கு தடையின்றி விநியோகிக்கப்படுகிறது!

# அரசியல் ஆதாயம் தேட அவதூறுச் செய்திகளை வெளியிடுவதா?

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கண்டனம்!

**சென்னை, நவ.9 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான விவசாயிகளின் நலன்காக்கும் சீர்மிகு நல்லாட்சியில், ஒரு சில அரசியல் தலைவர்கள் ஆதாயம் தேடுகின்ற வகையில் உண்மைக்கு புறம்பாக, அர்த்தமற்ற, அவதூறு செய்திகளை பரப்புகின்றனர். அவற்றை எல்லாம் பொதுமக்கள் புறம் தள்ள வேண்டும் - என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் பருவ காலங்களில் பயிர்சாகுபடி செய்து பயன் பெறுவதற்கு ஏதுவாக பயிர்க்கடன் மற்றும் உரங்கள் தங்கு தடையின்றி விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த சூழ்நிலையில் ஒரு சில அரசியல் தலைவர்கள் ஆதாயம் தேடும் வகையில் வெளியிட்டுள்ள அர்த்தமற்ற அவதூறு செய்திகளில் எள்ளளவும் உண்மை இல்லை.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீர்மிகு நல்லாட்சியில், விவசாயிகள் அந்ததந்த



பருவ காலங்களில் பயிர்சாகுபடி செய்ய ஏதுவாக மாநில தொழில்நுட்ப குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கடனளவிற்கு (Scale of Finance) உட்பட்டு விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்பவும் மற்றும் NABARD, RBI வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டும் பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2021-2022ஆம் ஆண்டில் 14,84,052 விவசாயிகளுக்கு ரூ.10,292 கோடி பயிர்க்கடனும், 2022-2023-ஆம் ஆண்டில் 17,43,817 விவசாயிகளுக்கு ரூ.13,442 கோடி பயிர்க்கடனும், 2023-2024ஆம் ஆண்டில் 18,36,345 விவசாயிகளுக்கு ரூ.15,542 கோடி பயிர்க்கடனும் வழங்கப்பட்டுள்ளது.

**ரூ.7,666 கோடி பயிர்க்கடன்!**

நடப்பாண்டில் 01.04.2024 முதல் 06.11.2024 வரை 8,62,544 விவசாயிகளுக்கு ரூ.7,666 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டை விட ரூ.450 கோடி கூடுதலாகும். சென்ற ஆண்டு இதே நாள் வரை ரூ.7216 கோடி கடன் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பயிர்க்கடன்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளில் உள்ள விவசாயிகளின் சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டு வழங்கப்படுகிறது. மேலும், விவசாயிகள் தங்கள் வீட்டிலிருந்தே பயிர் கடன் பெற ஏதுவாக மொபைல் செயலி (Online Mobile App) மூலம் பயிர்க்கடன் பெறும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதேபோல, பயிர்க்கடன்களை குறித்த காலத்தில் திருப்பி செலுத்திடும் விவசாயிகளிடம் வட்டி வசூலிக்கப்படுவதில்லை. அரசே அவ்வட்டி தொகையை ஏற்றுக்கொள்கிறது.

அதேபோன்று, விவசாயிகளுக்கு தங்குதடையின்றி உரம் அவர்களின் தேவைக்கேற்ப வழங்கப்பட்டு வருகின்றன. உரங்கள் வேளாண்மை துறை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் நகர்வு செய்யப்பட்டு, அந்தந்த சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஏதேனும் சங்கங்களில் இருப்பின்மை ஏற்பட்டால் Buffer Stockஇல் இருந்து உரங்கள் நகர்வு செய்யப்படும்.

1.4.2024 முதல் 6.11.2024 வரை 77,797 மெட்ரிக் டன் யூரியா, 41,119 மெட்ரிக் டன் DAP, 18,490 மெட்ரிக் டன் MOP, 70,116 மெட்ரிக் டன் காம்ப்ளெக்ஸ் உரங்களும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தற்போது வரை 32,755 மெட்ரிக் டன் யூரியா, 16,792 மெட்ரிக் டன் DAP, 13,373 மெட்ரிக் டன் MOP, 22,866 மெட்ரிக் டன் காம்ப்ளெக்ஸ் உரங்கள் கூட்டுறவு சங்கங்களில் இருப்பில் வைக்கப்பட்டு, உரங்கள் விவசாயிகளின் தேவைக்கேற்ப சிரமமின்றி பெற்றிட தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**குறைந்த வட்டியில் கடன்கள்!**

மேலும், தமிழ்நாட்டில் 4456 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மூலம் அந்தந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகள், குறு, சிறு வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான பயிர்க்கடன், நகைக்கடன், சுய உதவிக்குழு கடன், தாட்கோ, டாம்கோ, டாப்செட்கோ என 26 வகையான கடன்கள் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

இச்சூழ்நிலையில், ஒரு சில அரசியல் தலைவர்கள் ஆதாயம் தேடுகின்ற வகையில் உண்மைக்கு புறம்பாக, அர்த்தமற்ற, அவதூறு செய்திகளை பரப்புவதை வாடிக்கையாக வைத்துள்ளனர். அவற்றை எல்லாம் பொதுமக்கள் புறம் தள்ள வேண்டும்.

**சிறப்பாகச் செயல்படும் கூட்டுறவுத்துறை!**

கூட்டுறவுத்துறையின் மூலம் அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் அவ்வப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கும் சிறப்புத்திட்டங்கள் முதல் வெள்ள நிவாரணம் வரை அனைத்தும் பொதுமக்களிடம் சென்றடையும் வகையில் கூட்டுறவுத்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

எனவே, பொதுமக்கள் அவதூறு செய்திகளை புறம் தள்ளி, கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தமது செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

---

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏண்ணே; "பொதுக்கூட்ட மேடைகளில், தி.மு.க.வைத் தவிர வேறு எந்தக் கட்சியையும் விமர்சிக்க வேண்டாம்" என்று எடப்பாடி தனது கட்சியினர்க்கு அறிவுரை வழங்கியிருக்கிறாரே ?

**பட்டணம் : ஆமாம் அய்யா; பா.ஜ.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுக்கும் இப்போதிருந்தே வலை வீசிப் பார்க்கிறார் எடப்பாடி.**

**கடைசியில், 'கடை விரித்தேன் கொள்வாரில்லை' என்பதைப் போலத்தான் அவருடைய உத்தி ஊசிப்போகும் !**